**<u>சுற்றறிக்கை</u>**

அன்புள்ள விநியோகஸ்தர்களே மற்றும் பிரஞ்சைஸீக்களே,

உங்கள் அனைவருக்கும் வணக்கம்!!!!

நீங்கள் எங்கள் மதிப்பிற்குரிய சேனல் பார்ட்னர்கள். நிறுவனத்தின் வணிகம், ரிசர்வ் பாங்க் ஆஃப் இந்தியாவால் (ஆர்பிஐ) ஒழுங்குமுறைப்படுத்தப்படுகிறது மற்றும் பேமெண்ட் அண்ட் செட்டில்மெண்ட் சிஸ்டம்ஸ் ஆக்ட் 2007ன் பிரிவுகள் மற்றும் விதிகள் மற்றும் நிபந்தனைகள் மற்றும் அதன் கீழ் ஆர்பிஐ வழிகாட்டல்கள் மற்றும் பணப்பதுக்கல் தடுப்புச் சட்டம் (ஏஎம்எல்) வழிகாட்டல்கள், தீவிரவாதத்துக்கு நிதி உதவி அளிக்கும் செயல்களை கட்டுப்படுத்துதல் (சிஎஃப்டி) வழிகாட்டல்கள், உங்கள் வாடிக்கையாளர்களை புரிந்து கொள்ளுங்கள் (கேஒய்சி) வழிகாட்டல்கள் நிறுவனத்தின் வணிகத்துக்கு உரித்தாக்கப்படுகின்றன என்பதை நீங்கள் அறிவீர்கள். எனவே நிறுவனம் மற்றும் அதேபோல அதன் சேனல் பார்ட்னர்கள் வணிகம் சிக்கலின்றி சீராக நடைபெற மேற்கண்ட சட்டப் பிரிவுகளின்படி பின்பற்ற வேண்டிய பொறுப்புக்கு உள்ளாகின்றனர். வணிகம் பாதிக்கப்படாமல் இருக்க, நிறுவனத்தின் நலன் மற்றும் அதேபோல அதன் சேனல் பார்ட்னர்களின் நலனைப் பாதுகாக்க நிறுவனம் இந்த சுற்றறிக்கையை வெளியிடுகிறது.

இந்தியா முழுவதும் தீவிரவாத எதிர்ப்பு படைப் பிரிவுகள், சைபர் கிரைம் செல்கள், கிரைம் பிராஞ்ச்கள் மற்றும் பல்வேறு விசாரணை ஏஜென்சிகள் போன்றவை நடத்தும் விசாரணைகளின் கீழ் உள்ள ஏராளமான வழக்குகள் மூலம் எங்களுக்கு தெரிய வந்துள்ளது என்னவெனில், மோசடிக்காரர்களால்/சமூக விரோதிகளால் போலி லாட்டரி திட்டங்களில்/ஊழல்களில் பங்கேற்குமாறு பல விநியோகஸ்தர்கள் மற்றும் பிரஞ்சைஸீக்கள் ஆசை காட்டப்பட்டு கவரப்பட்டுள்ளனர்.

சமீபத்தில் மதிப்புக்குரிய நமது பல விநியோகஸ்தர்கள் மற்றும் ஐசிடபிள்யூக்களுக்கு அவர்களின் வங்கி கணக்கு விபரங்கள் கேட்டு +92 (பாகிஸ்தான்) என நாட்டின் கோட் எண் ஆரம்பிக்கும் நாட்டிலிருந்து பல்வேறு எண்களில் இருந்து அழைப்புக்கள் வந்துள்ளன. பல விநியோகஸ்தர்கள் அவர்களின் வங்கி கணக்கு விபரங்களைக் கொடுத்துள்ளனர் மற்றும் அவர்களின் வங்கி கணக்குகளில் அதிக பணம் டெபாசிட் செய்யப்பட்டு பெற்றுள்ளனர். அதன் பின் அந்த அழைப்பாளர் மீண்டும் விநியோகஸ்தர்களை அழைத்து அவர்களின் கணக்குகளில் பணம் டெபாசிட் செய்யப்பட்டுள்ளதாக கூறி, அந்த பணத்துக்காக ஐடிஇசட்கேஷ் கார்டுகளின் எண்கள் மற்றும் பாஸ்வேர்டுகளை கேட்பார்.

- சில தருணங்களில் அந்த நபர் ஒரு முன்பின் தெரியாத நபரை அழைத்து (அவர் ஒரு டிஸ்டி அல்லது ஐசிடபிள்யூ ஆக இருக்கலாம்) அவரது வங்கி கணக்கு எண்ணை கேட்பார் மற்றும் பொதுமக்கள் பலரை (அவர்களுக்கு லாட்டரியில் பரிசு விழுந்துள்ளதாக கூறி ப்ராசஸிங் கட்டணமாக பணம் டெபாசிட் செய்யுமாறு கேட்டுக் கொண்டு) முன்பின் தெரியாத நபரின் கணக்கில் பலரை சேர்த்து விடுவார்.
- அதன் பின் அந்த நபர், அந்த முன்பின் தெரியாத நபரை அழைத்து அவர் பணத்தை எடுத்துக் கொண்டு ஐடிஇசட்கேஷ் கார்டுகள் வாங்க ஒரு ஐடிஇசட்கேஷ் டிஸ்டியிடம் செல்லுமாறு கூறுவார்.
- கார்டுகள் வாங்கப்பட்ட உடனேயே, பாகிஸ்தானில் உள்ள நபர், அந்த முன்பின் தெரியாத நபரை அழைத்து ஐடிஇசட்கேஷ் கார்டுதாரர்களின் கணக்கு எண்கள் மற்றும் பாஸ்வேர்டுகளை கொடுக்கும்படி கேட்பார்.

இந்தியாவில் பல நகரங்களில் அவர்கள் ஏராளமானோர்களை ஏமாற்றியிருக்கிறார்கள் மற்றும் இது இப்போது காவல்துறையினரின் மற்றும் சிபிஐ-யின் கவனத்துக்கு வந்துள்ளது. அவர்கள் இது பற்றி விசாரணை நடத்தி வருகின்றனர். நமது டிஸ்டிகள் சிலரும் கூட இது சம்பந்தமாக கைது செய்யப்பட்டுள்ளனர் மற்றும் இந்த தவறான நோக்கத்துக்காக அவர்களின் வங்கி கணக்குகளை பயன்படுத்த அனுமதித்ததின் மூலம் இத்தகைய மோசடியில் பங்கேற்றதற்காக அவர்கள் போலீஸ் லாக்-அப்-பில் உள்ளனர். இத்தகைய போலி லாட்டரி திட்டங்களில்/ஊழல்களில் உங்களில் யாரேனும் அறிந்தோ அல்லது அறியாமலோ பங்கேற்கிறீர்கள் மற்றும் ஈடுபடுகிறீர்கள் எனில் ஏஎம்எல்/சிஎஃப்டி/கேஒய்சி/பிஎஸ்எஸ் வழிகாட்டல்களின் கீழ் ஒழுங்குமுறை மற்றும் சட்டத்தின் கீழ் குற்ற நடவடிக்கைக்கு உட்பட நீங்கள் பொறுப்பாவீர்கள்.

ஐஎஃப்டிஎஸ்பிஎல் இதன் மூலம் உங்கள் அனைவருக்கும் அறிவுறுத்துவது யாதெனில் அன்னியர்களுக்கோ அல்லது முன்பின் தெரியாதவர்களுக்கோ நீங்கள் கார்டுகளை விற்கும்போது நீங்கள் மிக கவனமாக மற்றும் விவேகமாக இருக்க வேண்டும் மற்றும் ரீடெய்லர்கள் அல்லது ஐசிடபிள்யூ அல்லாத நபர்களுக்கு கார்டுகளை கொடுக்கும்போது மிகவும் எச்சரிக்கையாக செயல்பட வேண்டும். மேலும் ஏதேனும் வாடிக்கையாளர் மிக அதிக பண மதிப்பில் கார்டுகள் பெற விரும்பினால் அவர்களுக்கு அந்த கார்டுகளை கொடுக்கும் முன் நீங்கள் அவரது அடையாள அட்டை, முகவரிச் சான்று மற்றும் அவரது உண்மையான மொபைல் போன் எண்களை பெற்று அவற்றை உங்களிடம் எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். மேலும் நீங்கள் எந்த அன்னியருக்கும் கணக்கு எண் அல்லது ஐடிஇசட்கேஷ் கார்டு பாஸ்வேர்டு போன்றவற்றை தெரிவிக்கக் கூடாது என அறிவுறுத்தப்படுகிறீர்கள். ஐடிஇசட்கேஷ் கார்டின்

பின்புறம் அச்சிடப்பட்டுள்ள மறைக்கப்பட்டுள்ள கணக்கு எண் மற்றும் பாஸ்வேர்டை நீங்கள் ஸ்க்ராச் செய்யவும் கூடாது.

மேற்கண்ட குறிப்புகளை யாராவது மீறியதாக கண்டறியப்பட்டால் இத்தகைய மோசடி திட்டங்கள்/ஊழல் காரணமாக ஏற்படும் அனைத்து பொறுப்புகளிலிருந்தும் ஐஎ்ஃப்டிஎஸ்பிஎல் தன்னை விலக்கிக் கொள்ளும் என்பதோடு, ஏதேனும் இத்தகைய மோசடி திட்டத்தின் / திட்டங்களின் காரணமாக எந்தவிதத்திலும் ஏற்படும் ஏதேனும் கோரிக்கைக்கு அல்லது குற்ற நடவடிக்கைக்கு கடமைப்படாது அல்லது பொறுப்பேற்காது.

இத்தகைய ஏதேனும் மோசடி திட்டத்தில்/திட்டங்களில் ஏதேனும் விநியோகஸ்தர்கள், பிரஞ்சைசீக்கள் பங்கேற்பதாக அல்லது ஈடுபடுவதாக அறியப்படுகிறது எனில் அவர்கள் மீது உரிய சட்ட நடவடிக்கையை ஐஎ்ஃப்டிஎஸ்பிஎல் மேற்கொள்ளும். மேலும் நீங்கள் ஏதேனும் மோசடி நடவடிக்கைகளில் ஈடுபடுவதாக ஐஎ்ஃப்டிஎஸ்பிஎல் அறிகிறது எனில் விநியோகஸ்தர்களிடமிருந்து பெறப்பட்ட அனைத்து பணத்தையும் தன்னிடம் நிறுத்தி வைத்துக் கொள்ளவும் ஐஎ்ஃப்டிஎஸ்பிஎல்-க்கு உரிமை உண்டு.

உங்களுக்கு ஏதேனும் இத்தகைய அழைப்பு வருகிறதெனில் அல்லது இத்தகைய ஏதேனும் சம்பவம் ஏற்பட்டால் 022-61125757 என்ற எண்ணில் அழைத்து உடனடியாக எங்களுக்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம் அல்லது எங்களுக்கு ஈ-மெயில் செய்யுங்கள் help@itzcash.com

இத்தகைய ஏதேனும் முன்பின் அறியாத/ சந்தேகத்துக்கிடமான அழைப்புக்கள் வந்தால் அவர்களிடம் பேசாதீர்கள் மற்றும் இத்தகைய மோசடி திட்டங்களில்/ஊழல்களில் கவரப்பட்டு உங்கள் பணத்தை இழந்துவிடாதீர்கள்.

நன்றி

இன்டர்ஆக்டிவ் ஃபைனான்சியல் & டிரேடிங் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட்டிற்காக,

26/04/2011.